•பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 03 வெள்ளிக்கிழமை (17-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:173

## சமாதான முயற்சி பற்றி தமிழ்ச்செல்வன் பேட்டி:

# புரிந்துணர்வு உடன்பாட்டின் அமுலாக்கம் மந்த கதியில்!

## அரசுத்தரப்பு மேலும் உறுதியை செயலில் காட்ட வேண்டும்

**வவுனியா,மே17**

**சமாதான முயற்சிகள் ஆரம்பத்தில் மிகவும் விறுவிறுப்பாக - சுறுசுறுப்பாக இடம்பெற்றன. தற்போது அதில் ஒருவித மந்த நிலை தெரிகின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் அம்சங்களை அவற்றுக்குரிய காலவரையறைக்குள் நடைமுறைப்படுத்துவதில் தாமதமான ஒரு சூழல் தென்படுகிறது. இது விடயத்தில் அரசுத்தரப்பு மேலும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.**

**இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**


சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக பி.பி.ஸி. தமிழோசைக்கு நேற்று அளித்த ஒரு பேட்டியிலேயே தமிழ்ச்செல்வன் இப்படிக் கருத்து வெளியிட்டார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான முயற்சிகள் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன. தற்போது காணப்படும் தாமதங்கள், மந்த கதியான செயற்பாடுகள் அவர்களது மனங்களில் அச்சத்தை உருவாக்கிவிடக்கூடாது.

படைத்தரப்பின் விட்டுக்கொடுப்பின்மையாலேயே கடந்த காலங்களில் சமாதான முயற்சிகள் குழம்பிப்போன துண்டு. அது போன்ற ஒரு நிலை மீண்டும் ஏற்படாமல் பிரதமர் ரணில்

(14ஆம் பக்கம் பார்க்க)



சமாதானத்தை வலியுறுத்தி கொழும்பிலிருந்து புறப்பட்ட குதிரைப் பவனி யாழ்நகரை வந்தடைந்தபோது எடுக்கப்பட்ட படம். *(படம்:தேவராஜன்)*

## தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக

# புலிகள் பேச்சை ஆரம்பிக்க உடன் தடையை நீக்குங்கள்!

### அரசிடம் 'சிவா' அவசரக் கோரிக்கை



யாழ்ப்பாணம்,மே17

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் அரசுடன் பேச்சை ஆரம்பிக்க வசதியாக அந்த அமைப்பு மீதான தடையை உடன் அரசு நீக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம்.சிவசிதம்பரம் கோரியுள்ளார்.

நேற்று அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தேவையான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது. பெரும்பான்மையான அமைச்சர்கள் இந்தப் பேச்சுத் தொடர்பாக அறிக்கைகளை

(14ஆம் பக்கம் பார்க்க)

# காஷ்மீர் நோய்க்கு ஏற்ற மருந்து மத்தியஸ்தம் என்கிறார் சந்திரிகா!

### இந்தியாவைச் சீண்டுகிறார் என்று பலரும் கருத்து

ஐக்கியநாடுகள்,மே17

ஐம்பது வருடங்களாகியும் காஷ்மீர் பிரச்சினை இன்னமும் தீரவில்லை. காஷ்மீர் நோய்க்கு ஏற்ற மருந்து மத்தியஸ்தம்தான். இந்தியாவும் பாகிஸ்தானும் தாமாக காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியவில்லை. என்றால் வேறுவழி மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம்தான்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் செய்தியாளர்கள் சங்கக் கிளப்பில் நடந்த தேநீர் விருந்தின்போதே ஜனாதிபதி இப்படிக் கூறினார்.

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இந்திய, பாகிஸ்தான் தலைவர்களைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவர தம்மால் முடிந்தவரையில் முயற்சி

(14ஆம் பக்கம் பார்க்க)

### மாவீரர் இல்ல புனரமைப்புப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே17

வடமராட்சி, கோப்பாய் ஆகிய இடங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை சிரமதானம் மூலம் புனர்நிர்மாணம் செய்யும் பணி அரம்பமாகியுள்ளது.

வடமராட்சி மாவீரர் துயிலும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நிலைமைகளை ஆராய

# வடக்கு - கிழக்குப் பகுதிக்கு எதிர்க்கட்சிக் குழு விஜயம்

கொழும்பு,மே17

போர்நிறுத்தம் ஏற்பட்ட பின்னர் வடக்குக் கிழக்குப் பகுதிகளின் தற்போதைய நிலைமைகளை ஆராய்வதற்காக பொ.ஐ.முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இப்பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக பண்டார மேற்கொண்டு வருவதாகவும்.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்னாயக்கா உட்பட பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது இந்தப் பயணத்துக்கான விருப்பத்தைத் தெரிவித்துள்ளதாகவும் - பொ.ஐ.மு. வட்டாரங்கள் தெரிவித்தன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் நடந்து கொள்ளும் முறைகள்பற்றி பொ.ஐ.முன்னணிக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும்-

(14ஆம் பக்கம் பார்க்க)

### பயணிகள் ஏமாற்றம்

தென்மராட்சி,மே17

முகமாலை சோதனைச் சாவடியைத் தாண்டிச் செல்வதற்காக நேற்று விடிகாலையிலேயே அங்கு சென்ற பயணிகள் ஏமாற்றமடைந்தனர்.

முகமாலை ஊடாக காலை 6 மணி தொடக்கம் பயணத்தினை மேற்கொள்ளலாமென யாழ். படைத் தலைமையகம் அறிவித்திருந்த போதிலும் நேற்றுக் காலை சென்ற பயணிகளும் வாகனங்களும் மிருசுவில் சந்தியில் தடுத்து வைக்கப்பட்டு காலை 7.30 மணிக்குப் பின்னரே மேற்கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.(ஐ-117)

# தீவக நிலைமை பற்றி மொறகொட கடற்படை அதிகாரிகளோடு ஆராய்வு!

யாழ்ப்பாணம்,மே17

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சர் மிலிந்த மொறகொட தீவகத்தின் பாதுகாப்பு மற்றும் இராணுவ நிலைகள் குறித்துக் கடற்படையினருடன் விரிவாக ஆராய்ந்தார்.

கடற்படை உயர் அதிகாரிகள் மற்றும் அமைச்சு அதிகாரிகள் சகிதம் யாழ்.வந்த அமைச்சர் மண்டைதீவு, அல்லைப்பிட்டி சோதனை நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள தளநிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

பின்னர் காரைநகர் கடற்படை முகாமுக்குச் சென்ற அமைச்சர் கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

தீவகத்தில் தமது அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் போராளிகள் அங்கு சென்ற சமயம் அவர்கள் மண்டைதீவு, அல்லைப்பிட்டி சோதனை நிலைகளில் வைத்துத் திருப்பியனுப்பப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டிருந்தனர். நோர்வே சமாதானக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேச்சின்போது இந்தியத் தரப்பும் பிரசன்னம்?

கொழும்பு,மே17

தாய்லாந்தில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள பேச்சின்போது இந்தியத் தரப்பினர் பிரசன்னமாகக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு தெரிவித்தார் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சர் மிலிந்த மொறகொட. பேச்சுக்கான நிகழ்ச்சிநிரல் இதுவரையிலும் வகுக்கப்படவில்லை. ஆனாலும் பேச்சுத் தொடர்பான விடயங்களை நோர்வே தரப்பின் ஊடாக அரசும் புலிகளும் பரிமாறிக் கொள்கின்றனர். காலத்திட்டங்களை வகுப்பதிலும் பார்க்க பேச்சுக்கான ஆக்கபூர்வமான விடயங்களை முன்னெடுப்பது நல்லது. பேச்சின்போது ஒவ்வொரு முன்னேற்றங்களையும் தின அடிப்படையில் அரசு கணிக்கும்.

இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஒ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## புதிய பாணியில் பணம் பறிப்பு!

குடும்பஸ்தர் ஒருவர் கடைக்குச் சென்றதைப் பார்த்துவிட்டு அவரது வீட்டிற்குச் சென்ற நபரொருவர் வீட்டிலே தனிமையில் இருந்த பெண்ணை ஏமாற்றி பணத்தை அபகரித்துச் சென்றுள்ளார்.

கடையில் பொருள்கள் வாங்கிய வீட்டுக்காரர் பணம் போதாமல் அங்கு காத்துக் கொண்டிருக்கிறார். அவர் 1500 ரூபா வாங்கி வருமாறு என்னை அனுப்பினார் எனக் கூறினார். அந்தப் பெண் அதனை நம்பி பணத்தைக் கொடுத்தார். அந்த நபர் பணத்தை வாங்கிக் கொண்டு பறந்தார்.

இந்தச் சம்பவம் அண்மையில் வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சாவகச்சேரியிலிருந்து இடம் பெயர்ந்து வட்டுக்கோட்டையில் வசித்து வரும் குடும்பத்தினரே இந்த நிலைமைக்கு உள்ளாகியுள்ளனர்.(எ-13-ரி)

## பாடசாலையில் சிரமதானம்

யாழ்ப்பாணம்,மே17

கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம் எதிர்... 22 ஆம் திகதி முதல் சொ...த்தில் இயங்கவுள்ளதால் பாடசாலை வளாகம் இன்று வெள்ளிக்கிழமை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளதாக பாடசாலை அதிபர் செ.முத்து ...கம் தெரிவித்துள்ளார். (ஓ-9)

## இடம்பெயர்ந்தோர் பதிவுகளை மேற்கொள்ளுக

யாழ்ப்பாணம்,மே17

யாழ். பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஜே/64 மற்றும் ஜே/65 கிராம அலுவலர் பிரிவுகளில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்கள் தமது பதிவுகளை இன்று வெள்ளிக்கிழமைக்குள் பாஷையூர் அந்தோனியார் தேவாலயத்தில் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-9)

## பச்சிலைப்பள்ளியில் மீண்டும் இயங்கும் அரச அலுவலகங்கள்

தென்மராட்சி,மே17

இரண்டு வருடங்களின் பின்னர் பளை பிரதேச செயலகம் மற்றும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை மீண்டும் சொந்த பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் தொடக்கம் இயங்கத் தொடங்கியுள்ளன.

பளை பிரதேச செயலகத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இ.ஐயாத்துரையும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையை யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தனர்.

இடம்பெயர்வின் பின்னர் பளைப் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம், புலோலி ஆகிய இடங்களிலும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை பருத்தித்துறை தும்பளையிலும் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-31-117-173-182)

## இடம்பெயர்ந்தோர் சொந்த இடத்துக்கு திரும்பினர்!

தென்மராட்சி,மே17

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலயப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற 28 குடும்பங்களைச் சேர்ந்த 132பேர் நேற்றுமுன்தினம் வன்னியிலிருந்து இரண்டு வாகனங்களில் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர்.

தற்போது தேவாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இக்குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்களையும் சமையல் பாத்திரங்களையும் படையினர் வழங்கியதாக கோவில் குடியிருப்பு கிராம அலுவலர் க.செல்வராசா தெரிவித்தார்.(ஓ-117)

## 12ஆவது ஆண்டு நிறைவு விழா

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகத்தின் 12ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சீனியர் ஒழுங்கையிலுள்ள செவிப்புலனற்றோர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் செந்தில் குமரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சட்டத்தரணி வை.த.சிவலிங்கம், நல்லூர் றோட்றிக் கழக உபதலைவர் ச.சிவநேசன், செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் போசகர் வே.மகேந்திரசிங்கம், தலைவர் சே.செல்வகுமார், ஆலோசகர் க.சண்முகநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். (எ-13)





யாழ்ப்பாணத்துக்கு இரு நாள்கள் விஜயம் மேற்கொண்டுள்ள தென்னிலங்கை வர்த்தகத் தூதுக் குழுவினரில் ஒரு பகுதியினர் 'உதயன்' பணிமனைக்கு நேற்று வருகை தந்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே17

காரைநகர், களபூமி, பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது. (எ-13)

☆ ☆ ☆

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-13)

☆ ☆ ☆

மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வசந்த மஹோற்சவ பெருவிழா இன்று நண பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலய உற்சவங்களில் கலந்துகொள்ளவுள்ள அடியார்கள் தினமும் காலை தெல்லிப்பழை தடைமுகாமிலிருந்து பஸ் மூலம் அழைத்துச் செல்லப்படுவர். தினமும் ஆலயத்தில் அன்னதானமும் இடம்பெறும். (எ-13)

☆ ☆ ☆

கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.(எ-13-ரி)

☆ ☆ ☆

தூய ஆவியின் பெந்தக்கோஸ்தே விழாவையொட்டிய திருவிழிப்பு ஆராதனை நாளை சனிக்கிழமை இரவு யாழ். புனித மாட்டீனார் குருமட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் இவ்ஆராதனை அடுத்தநாள் அதிகாலை 4.30 மணிக்கு யாழ். ஆயரின் திருப்பலியுடன் நிறைவடையும்.(எ-ரி)

☆ ☆ ☆

தொல்புரம் கொட்டடி ஆதிமுத்து மாரி அம்மன் கோயில் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாள்களுக்கு இடம் பெறும் உற்சவ நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை மேற்பார்வையாளரும் சொற்பொழிவுவாளருமான கு.கைலாயபிள்ளையின் 'எல்லாம் அவளே'என்ற தலைப்பிலான தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

25ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஓ-15)


### உதவியாளர் தேவை

திருமண சேவை ஒன்றுக்கு ஆண் உதவியாளர் தேவை.25~30வயதுக் கிடைப்பட்டவர் விரும்பத்தக்கது.

*உடன் நேரில்வரவும்.*

தொடர்பு:

**கமலக்கண்ணன் திருமணசேவை,**

இல. 770,772, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (3827)


## விளையாட்டு நிகழ்வு

ஆவரங்கால் இந்து இளைஞர் மன்றம் மின்னொளியில் நடத்திவந்த கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதியாட்டம் இன்று இரவு நடைபெறவுள்ளது. இறுதியாட்டத்தில் அச்சுவேலி தெற்கு விக்னேஸ்வரா வி.கவும் ஆவரங்கால் மத்திய வி.கவும் மோதுகின்றன. (-173)


### சைவசமய அறிவுப் போட்டி ~ 2002

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு நடத்தவுள்ள மேற்படி போட்டி 19.05.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் விண்ணப்பித்தோரும், பங்குபற்ற விரும்புவோரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தேர்வு செயலாளர்,*

(3836) கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம்.


### கண்ணீர் அஞ்சலி

மகியங்கனை ஆற்றில் மூழ்கி பரிதாபகரமாய் உயிரிழந்த

J/73 யாழ்நகர் மேற்கு, கிராமிய சமுர்த்தி செயலணியின் தலைவரும்,

யாழ். அடைக்கல அன்னை ஆலய இளையோர் மன்ற உறுப்பினருமாகிய

**தேவராஜா சாம்சன்**

அவர்களுக்கும் அவரது சக நண்பன்

**மனோகரன் யூட் ரஞ்சித்**

அவர்களுக்கும் எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

இவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவர்களின் ஆன்மா இறைசாந்தி அடைய அடைக்கல அன்னையைப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும்,

செயலணி உறுப்பினர்களும்.

(3844) J/73 யாழ்நகர் மேற்கு.

## பொதுமக்களுக்கு இடையூறாக வீதியில் பட்டாசு கொளுத்திய நபருக்கு 1000ரூபா அபராதம்

### நன்னடத்தைப் பிணையில் விடுதலை

தென்மராட்சி,மே17

பொதுமக்களுக்கு இடையூறாக வீதியில் நின்று பட்டாசு கொளுத்திய இளைஞர் ஒருவருக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தால் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் அந்த இளைஞரை 2 வருட கால நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கெடிகாமம் பகுதியைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட இளைஞர், கடந்த செவ்வாய்க்கிழமை கொடிகாமம் சந்தை மற்றும் பஸ் நிலையப் பகுதிகளில் நடமாடிய பொதுமக்களிடையே பட்டாசுகளைக் கொளுத்தி வீசி அவர்களை பதற்றமடைய வைத்ததாகவும் -

இது குறித்து தகவல் கிடைத்ததையடுத்து அங்கு சென்ற கொடிகாமம் பொலீஸார் அந்த இளைஞரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து விசாரணை நடத்திய சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் மேற்படி தீர்ப்பை வழங்கினார். (ஓ-117)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் தேவராஜா சாம்சன்

(யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவன்)

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, அடைக்கலமாதா கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட செல்வன் தேவராஜா சாம்சன் 13.05.2002 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, ஞானம்மா, செல்லத்தம்பி மற்றும் லூத்தம்மா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும், தேவராஜா - அமலராஜேஸ்வரி (ராணி) தம்பதியினரின் பாசமிகு மகனும் திருமதி ஜெயா யோன்சன் (ஆசிரியர், கலாலயா பயிற்சியகம், யாழ்ப்பாணம்), யோன்சன், றொபின்சன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நெல்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோன்சன் (டோகா) அவர்களின் அன்பு மைத்துனரும் அன்ரன் றோசாறி (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும் மகேஸ்வரன் கொன்சி (பிரான்ஸ்), இருதயராசா டெய்சி (Oxfam - (U.K.) - அக்கராயன்), ஜெயம் சாந்தா (கனடா), அன்ரன் நவமலர் (இத்தாலி) ஆகியோரின் பெறாமகனும் ஸ்ரலோன், கொன்சன்ரா, ஸ்ரெப..ன் ஆகியோரின் மைத்துனரும் பிரசாந்தன், விஜயசாந்தன், ஜெயசாந்தன், லக்ஷிகா, லுட்சிகா, ஜெமில் (அக்கராயன் மகாவித்தியாலயம்), ஜெனிஸ் ஜெறூஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (18.05.2002) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ். புனித அடைக்கல மாதா ஆலயத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அடைக்கலமாதா கோயில் அருகில்,*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
திரு.திருமதி தேவராஜா
(பெற்றார்)

(3847)

### செல்வன் மனோகரன் யூட் ரஞ்சித்

யாழ்ப்பாணம், 2ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த மனோகரன் யூட் ரஞ்சித் 13.05.2002 திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் மனோகரன் - சிறாப்பீன் தம்பதியினரின் அன்பு மகனும் பேணாட்(சவூதி), மரீனா, றெக்சன்(விஜே), நிரோஜன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை(18.05.2002) சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.புனித அடைக்கலமாதா ஆலயத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்துக்காக யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*209, 2ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
யே.மனோகரன்
(தகப்பன்)

(3850)

# யுத்தக் குற்றச் சந்தேகநபர்கள் இருவர் ஹேக் நீதிமன்றில் சரண்

ஹேக்,மே17

யூகோஸ்லாவியாவில் பொஸ்னிய மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன அழிப்பு யுத்தம் தொடர்பாக ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றத்தால் தேடப்பட்டுவரும் யுத்தக் குற்றச் சந்தேக நபர்களான இரு சேர்பியர்கள் சரணடைந்துள்ளனர்.

யூகோஸ்லாவிய இராணுவத்தின் முன்னாள் ஜெனரல் மலி மார்ஸிக், முன்னாள் குறோஸிய சேர்பிய தலைவர் மிலன் மர்டிக் ஆகியோரே சரணடைந்துள்ளவர்களாவர்.

ஜெனரல் மார்ஸிக் மீது பாரதூரமான போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. 1991ஆம் ஆண்டு சேர்பியர்களல்லாத 200 பேரை குறோஸ்னியர்களின் நகரான வகோவரில் கொன்று குவித்தார் என்பது அதில் மிக முக்கியமானது.

1995ஆம் ஆண்டு குறோஸ்னியர்களின் நகரில் சேர்பியர் இல்லாத 5 பொதுமக்களை கொல்வதற்கான உத் தரவை வழங்கியுள்ளார் என்று மர்டிக் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

நெதர்லாந்து நகரான ஹேக்கில் நடைபெறும் இந்தப் போர்க் காலக் குற்ற விசாரணைகளில் ஐ.நா.வால் தேடப்பட்டுவந்த இரு சந்தேக நபர்கள் ஏற்கனவே கடந்த மாதம் சரணடைந்திருந்தனர். அவர்களைத் தொடர்ந்து தற்போது இவர்கள் இருவரும் சரணடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும், இந்த விசாரணைகளில் தமது சேர்பிய மக்களின் சார்பில் கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்காகவே தாம் சரணடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.



சரணடைந்த சந்தேகநபர்கள் இருவர்

இந்த வழக்கு விசாரணைகளில் முக்கிய குற்றவாளியான யூகோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர் சொலபோடோன் மிலோசெவிக் மீது ஏற்கனவே ஹேக் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன (ம)

## தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை உட்பட

# முக்கிய விடயங்களில் ரஷ்யாவுடன் இணைந்து செயற்பட நேட்டோ முடிவு

மொஸ்கோ,மே17

தீவிரவாதத்துக்கு எதிரான போர் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் முடிவுகளை எடுக்கும்போது ரஷ்யாவுடன் இணைந்து செயற்படுவதற்கு வட அயர்லாந்து ஒப்பந்த நாடுகளின் ஒன்றியம்(நேட்டோ - Nato) இணங்கியுள்ளது.

இது தொடர்பாக கூட்டு நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 28ஆம திகதி நடைபெறும் நேட்டோ நாடுகளின் விசேட மாநாட்டில் இந்த உத்தேச கூட்டு நிர்வாகம் உருவாக்கப்படும்.

நேட்டோவின் முடிவுகளை எடுக்கும் குழுவுக்குள் ரஷ்யா உள்வாங்கப்படுவது இதுவே முதற்றடவை.

நேட்டோ - ரஷ்ய கூட்டு நிர்வாக மன்றத்தை ஐஸ்லான்ட் தலைநகரில் இடம்பெற்ற கூட்டத்தில் நேட்டோ நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் அங்கீகரித்தனர். இந்தக் கூட்டத்தில் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் இகோர் இவானோவும் கலந்துகொண்டார்.

நேட்டோ நாடுகளுக்கும் ரஷ்யா மற்றும் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளுக்கும் இடையிலான சுதந்திரமான உறவுகளில் இது ஒரு புதிய அத்தியாயம் என்று அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் கொலின் பவல் இது குறித்துக் கருத்துத் தெரிவித்தார்.

இந்த இணக்கம் குறித்து கருத்துக் கூறிய பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜக் ஷிராக் - "பனிப் போரின் மரணத்துக்கான இறுதிச் சடங்கு இது" - என்று வர்ணித்தார்.

இந்தக் கூட்டம் நடந்து முடிந்த ஒரு நாளின் பின்னர், தம்மிடம் இருக்கும் அணு ஆயுதங்களில் மூன்றிலிரு பகுதியினை அடுத்துவரும் 10 வருடங்களுக்குள் அழித்துவிடப்போவதாக அமெரிக்காவும் ரஷ்யாவும் இணைந்து அறிவித்துள்ளன.

(ம)



மாநாட்டில் கலந்துகொண்ட ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் இகோர் இவானோவுக்கு கைலாகு கொடுக்கும் அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் கொலின் பவல்.

# அமெரிக்க விமானங்களை கடத்த பின்லேடன் திட்டம்

## அதிபர் புஷ் எச்சரிக்கை

நியூயோர்க்,மே17

அமெரிக்கா மீது தாக்குதல் நடத்துவதற்காக மீண்டும் விமானங்களைக் கடத்துவதற்கு சர்வதேச பயங்கரவாதியான ஒஸாமா பின்லேடன திட்டமிட்டு வருகிறார்.

- இவ்வாறு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவித்தார். தனக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல் அறிக்கையை மேற்கோள் காட்டி அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.


இம்முறை விமானங்களைக் கடத்தி அவற்றில் இருந்தவாறு கட்டடங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்துவதற்குத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்று புலனாய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 11இல் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தற்கொலைத் தாக்குதல்கள் குறித்து அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினருக்கு எந்தத் தகவல்களுமே தெரிந்திருக்கவில்லை என்று அப்போது பெரும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.



செப்ரெம்பர் 11 தாக்குதலில் நொறுங்கிப் போய்க் கிடக்கும் வர்த்தக மையக் கட்டடம்

இதனால் தற்போது அமெரிக்க புலனாய்வுத்துறையினர் அதியுயர் உஷார் நிலையில் செயற்பட்டு வருகின்றனர். இதனால் சிறிய தகவல்கள், தடயங்களைக்கூட அவை இப்போது வெளிப்படுத்தத் தயங்குவதில்லை. அதனாலேயே இந்த அறிக்கை புஷ்ஷிடம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.



"நாம் பொதுவான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளோம். ஒஸாமா பின்லேடனால் ஏற்படுத்தப்பட்ட இந்த அச்சுறுத்தல் அமெரிக்கா உட்பட முழு உலகையும் பாதித்துள்ளது"- என்றார் புஷ். (ம)

## நால்வர் கைது!

சர்வதேச ரீதியில் சுமார் 900 கோடி ரூபா மதிப்புள்ள பணத்தை வங்கிகளில் மோசடி செய்ததாகக் கருதப்படும் நான்கு இந்தியர்களை அமெரிக்கப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின் நியூஜேர்ஸி நகரில் வசித்துவரும் நான்கு இந்தியர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

## சந்தையில் குண்டு வெடித்து 9பேர் படுகாயம்

ஜகர்த்தா,மே17

பிலிப்பைன்ஸில் நேற்று வியாழக்கிழமை மக்கள் நெரிசல் மிகுந்த சந்தை ஒன்றில் குண்டு வெடித்ததில் 9பேர் படுகாயமடைந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

சந்தையில் இருந்த ஒரு சிறிய உணவகத்தினுள் வைக்கப்பட்டிருந்த பொதியிலிருந்த உள்நாட்டுத் தயாரிபுக் குண்டே வெடித்ததாக பொலீஸ் அதிகாரி தெரிவித்தார். அதனாலேயே பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை -

நாட்டின் தென்பகுதி நகர் ஒன்றில் இடம்பெற்ற மற்றுமொரு சிறிய குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணிகள் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். (ம)

# நெதர்லாந்து பொதுத் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின

நெதர்லாந்துப் பொதுத் தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. குடியேற்றவாதத்துக்கு எதிரான தீவிர கருத்தைக் கொண்ட - கொல்லப்பட்ட பிம்போர்டுயன் தலைமையிலான - கட்சி இரண்டாவது இடத்தையும் தற்போதைய பிரதமர் விம் ஹொாக்கின் கட்சி மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.

150 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையாக 43 ஆசனங்களையும், பிம் போர்டுயனின் எல்.பி.எவ். கட்சி 26 ஆசனங்களையும், பிரதமர் விம் ஹொாக்கின் கட்சி 23 இடங்களையும் வென்றுள்ளன.

உலக அரங்கில்



எதிர்காலப் பிரதமர்

நாட்டின் அடுத்த பிரதமராக கிறிஸ்தவ ஜனநாயக கட்சித் தலைவர் ஜான் பீற்றர் பல்கெனெட்டி விரைவில் பதவியேற்பார்.

தீவிர வலதுசாரிக் கட்சியான எல்.பி.எவ். கட்சியின் தலைவர் பிம் போர்டுயன் தேர்தலுக்கு 9 நாள்கள் இருக்கையில் சுட்டுக்கொல்லப்பட்டார். இதுவே அந்தக் கட்சி தேர்தலில் இரண்டாவது இடத்தைப் பெறுவதற்கான அனுதாப அலையைத் தோற்றுவித்தது என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# ஊழல் குறைந்த நாடு ஆஸ்திரேலியா

சிங்கப்பூர்சிற்றி,மே17

உலக நாடுகளில் எங்கு லஞ்ச ஊழல் குறைவாக இருக்கிறது என்று ஒரு கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டது.

லஞ்சம் குறைந்த நாடாக ஆஸ்திரேலியா விளங்குகிறது. அதற்கு அடுத்த இடத்தில் சுவீடனும் 3ஆவது இடத்தில் சுவிற்ஸர்லாந்தும் இருக்கின்றன.

4ஆவது இடத்தில் ஆஸ்திரியாவும், 5ஆவது இடத்தில் கனடாவும், 6ஆவது இடத்தில் நெதர்லாந்தும், 7ஆவது இடத்தில் பெல்ஜியமும், 8ஆவது இடத்தில் இங்கிலாந்தும் இருக்கிறது.

9ஆவது இடத்தை சிங்கப்பூர் பிடித்து இருக்கிறது. அப்படியானால் ஆசியாவிலேயே குறைந்த அளவு லஞ்ச ஊழல் உள்ள நாடு சிங்கப்பூர்தான்.

அமெரிக்காவுக்கு 13ஆவது இடம் கிடைத்து இருக்கிறது. மலேசியா, ஹொங்கொங் நாடுகள் 15ஆவது இடத்தில் உள்ளன. சீனா 20ஆவது இடத்தில் உள்ளது.

இந்தக் கணிப்பு கடந்த டிசெம்பர் முதல் மார்ச் மாதம் வரை எடுக்கப்பட்டது.

உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவன அதிகாரிகள், கணித நிபுணர்கள், சட்டத்தரணிகள் ஆகியோரிடம் இதற்காக கருத்துக்கள் கேட்கப்பட்டன. (ம)

# பட்டினிச்சாவை எதிர்நோக்கும் யுனிட்டா உறுப்பினர்கள்

லுவாண்டா,மே17

அங்கோலாவில் யுனிட்டா தீவிரவாதிகள் அரசுடன் சமரசம் செய்துகொண்டதைத் தொடர்ந்து அங்கு பல வருடங்களாகத் தொடர்ந்து வந்த உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. ஆனால் இந்த சமரசத்தால் கலைக்கப்பட்ட யுனிட்டா அமைப்பின் உறுப்பினர்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டின் தென்பகுதியில் உள்ள ஹூலியா மாகாணத்தில் நாளாந்தம் சுமார் 5 யுனிட்டா உறுப்பினர்கள் இறந்துகொண்டிருப்பதாக யுனிட்டா தளபதிகளில் ஒருவரான பிரிகேடியர் பஸிலியோ சபலங்கா தெரிவித்தார்.

அரசு தங்களுக்கு எந்த உதவிகளையும் செய்வதில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஆனால் யுனிட்டா உறுப்பினர்களுக்கு உதவுவதற்கும் நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கும் உலகநாடுகள் உதவவேண்டும் என்று அங்கோலாப் பிரதமர் எகுராடோ தெரிவித்தார்.

யுனிட்டா அமைப்பின் தலைவர் சவிம்பி இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அந்த அமைப்பு, அரசுக்கு எதிரான போராட்டத்தைக் கைவிட்டு சமரசம் செய்துகொண்டது. அமைப்பின் ஒரு தொகுதியினர் நாட்டின் இராணுவத்தில் இணைக்கப்பட்டனர்.



யுனிட்டா அமைப்பு உறுப்பினர்கள்

ஏனையவர்கள் தொழில்வாய்ப்பு ஏதுமின்றி பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறு பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ள யுனிட்டா உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரது எண்ணிக்கை 35ஆயிரம் வரையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஒகிநோவா தீவில் சுதந்திர தினம்

டோக்கியோ,மே17

ஜப்பானின் தென்பகுதியில் உள்ள சிறிய தீவு ஒகிநோவா. 2ஆம் உலகப் போரில் இங்குதான் ஜப்பான் படைகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் கடுமையான போர் நடந்தது. 1945ஆம் ஆண்டு ஜப்பான் சரணாகதி அடைந்தது முதல் இந்த தீவு அமெரிக்க கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. இந்தத் தீவில் அமெரிக்க விமானப்படை மற்றும் கடற்படைத் தளம் என்பன இருந்தன.

தீவு வாசிகளுக்கும், அமெரிக்கப் படைகளுக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து ஒகிநோவா தீவை 1972 ஆம் ஆண்டு ஜப்பானிடம் அமெரிக்கா ஒப்படைத்துவிட்டது. அது நடந்து 30 ஆண்டுகள் ஆகியதையொட்டி ஒகிநோவாவில் சுதந்திர தின விழாவாக அதனைக் கொண்டாடினார்கள்.

ஆனால் இன்னமும் ஒரு தொகுதி அமெரிக்கப் படையினர் ஒகிநோவாவில் நிலைகொண்டுள்ளனர்.

Target Logistics International (Pvt) Ltd

உலகின் எந்தப் பாகத்திற்கும்
பொதிகளை (Cargo)
ஆகாய, கடல் மார்க்கமாக
ஏற்றுமதி செய்ய
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும்
இறக்குமதி செய்யவும்
குறைந்த கட்டணத்தில்
சிறந்த சேவைக்கு
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

24 மணிநேர சேவை

டாகற் லொஜிஸ்ரிக்ஸ் இன்ரநெஷனல் பிரைவேற் லிமிட்டெட்
தொலைபேசி : 01 520441
பக்ஸ் : 01 526573
ஈ-மெயில் : pftarget@sltnet.lk

## பாடசாலை கல்வி அமைச்சர் 30ஆம் திகதி யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,மே17

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரவிமல ராஜபக்ஷ எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார்.

அன்றையதினம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள நிகழ்வில் கலந்துகொள்ளும் அமைச்சர் குடாநாட்டில் உள்ள '1ஏபி'தர பாடசாலை அதிபர்களிடம் விஞ்ஞான பாடநூல்களை வைபவ ரீதியாகக் கையளிக்கவுள்ளார்.

வேம்படி மகளிர் கல்லூரியில் நடை பெறும் நிகழ்வில் சகல '1ஏபி' பாடசாலைகளின் அதிபர்களையும், வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா கேட்டுள்ளார். (ஐ-10)



யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மாணவர் குழுவினர் வில்லுப் பாட்டு மூலம் சுகாதார விழிப்புணர்வு தொடர்பான கருத்துக்களை குடாநாட்டில் எடுத்துக்கூறிவருகின்றனர்.

இது தொடர்பான நிகழ்வு ஒன்று நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கொக்குவில் பொது நூலக்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படத்தையே இங்கு காண்கிறீர்கள். (எ-ரி)

பாதுகாப்பான எதிர்காலத்திற்கு



இலங்கை வங்கியின் 'ரண் கெகுளு' சிறுவர் சேமிப்பு கணக்கு தனித்துவமான காப்புறுதியையும் நலன்கள் பலவற்றையும் கொண்டு வருகின்றது.

- பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் மரணத்தில் அல்லது உடல் ஊனத்தில் ரூபா 500,000/= வரையிலான காப்புறுதி.
- சிறுவர்கள் விபத்துக்களுக்கு முகம்கொடுக்கும் தருணத்தில் ரூ.75,000/= வரையிலான கொடுப்பனவுகள்.

உங்கள் பிள்ளைக்கு பாரிய காப்புறுதியை வழங்கி எதிர்காலத்திற்கு உத்திரவாதம் அளிக்கும் தனித்துவமான திட்டமே ரண் கெகுளு சிறுவர் சேமிப்பு கணக்கு.


இலங்கை வங்கி
உங்கள் தேவைகளைச் சந்திக்கும்



ரண் கெகுளு


Twin

உங்கள் விவசாயத் தேவைகளுக்கு நம்பிக்கையானவர்களை நாடுங்கள்!



BROWNS

மின்சாரப் பம்பிகள்
சிங்கிள் பேஸ் வீட்டுப் பாவனை மற்றும் விவசாயப் பம்பிகள் 1"- 3" குழாய் அளவுகளில் கிடைக்கும். இத்தாலி மோட்டார் மற்றும் மணற்பாங்கான இடங்களில் பாவனைக்குகந்த செரமிக் சீல். நீடித்துழைப்பதும், நம்பிக்கையானதும். உதிரிப்பாகங்கள் இலகுவில் கிடைக்கும்.



BROWNS

என்ஜின் பம்பிகள்
2"x2" குழாய் அளவுகளில் NSP மற்றும் SP மொடல்கள். காற்றினால் குளிரூட்டப்படும். ஜப்பானிய 4.2 hp குபோட்டா KS 200 பெற்றோல்/கெரசின் என்ஜின் உதிரிப்பாகங்கள் எளிதில் கிடைக்கும்.

பிறவுண் அன்ட் கம்பனி

BROWNS GROUP BG ESTD 1875

யாழ்.குடா நாட்டிலிருந்து விற்பனை முகவர்கள் தேவை

உங்கள் நிறுவனத்தின் முழுமையான விவரங்களை எழுதிக் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.



hudson sprayer

ஹட்சன் பிளாண்டர் மிஸ்ட் விசிறு கருவி
அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டது. 1.25லீ கொள்ளளவு விசிறு கருவி சிறு தோட்டச் செய்கைக்கு உகந்தது. துருப்பிடிக்காத தயாரிப்பு நீடித்து உழைப்பு.



Brownspray

ஸ்டெயின்லஸ் ஸ்டீல் விசிறு கருவிகள்
16லீ பகுதி தன்னியக்க, முதுகில் பொருத்தும் விசிறு கருவி. வளைந்த அடப்டர். இலவச தர நியம உதிரிப்பாகங்கள். துணையுறுப்புகள் பொதி.

ஏகமுகவர்கள்: பிறவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்
விவசாயப் பணிப்பகம்
இல. 75, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 10
தொலைபேசி : 674172, 695238, 674332 பக்ஸ்: 692814

உதயன்

## பொறுப்புணர்வு அவசியம்

குடாநாட்டில் சமூக விரோதச் செயல்கள் மிகப் பெரிய அளவில் தலைதூக்கியிருக்கின்றன. கோஷ்டி மோதல்கள் பெருகி அதனால் காயமடைந்து மருத்துவ மனைகளில் சேர்க்கப்படுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது.

பகைமை, பழிவாங்கும் போக்கு சமூகத்தில் மேலோங்கி வருவதையே தெருச் [illegible] கோஷ்டி மோதல்களும் எடுத்துக்காட்டுகின்றன.

நாளாந்தம் பத்திரிகைகளில் வரும் செய்திகள் முழு குடாநாட்டு சமூகத்துக்குமே தலைகுனிவை ஏற்படுத் துவனவாகக் காணப்படுகின்றன.

சமூகவிரோதச் செயல்கள், சீரழிவு நடவடிக்கைகளை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்றும், பொது அமைப்புக்களின் ஒத்தாசையோடு இத்தகைய செயல் களை வேரோடுகளைய தாங்கள் திடசங்கற்பம் பூண் டிருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்த்துறையினர் மக்களுக்குத் தெரிவித்துள்ளனர். அரசியல் பணிகளை ஆரம்பிப்பதற்காக வந்த புலிகள் பிரதிநிதிகளுக்கு இந்தச் சமூகச் சீரழிவு விவகாரம் ஒரு சவாலான பணியாக உருவெடுத்திருக்கிறது.

புற்றுநோய்போல் பரவிவரும் இந்தச் சீரழிவுகளைத் தடுத்து, சமூகத்தை அதளபாதாளத்தில் வீழாது தடுக்கும் பணியையே தங்கள் முதற்பணியாக நிறை வேற்றும் கட்டாயம் புலிகளுக்கு.

1995ஆம் ஆண்டுக்கு முன்னர் குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த சமயம் சட்டம் ஒழுங்கைப் பேணுவதிலும் சமூகவிரோதச் செயல் களைக் கட்டுப்படுத்தித் தடுப்பதிலும் எதிரியே வியந்து பாராட்டும் அளவுக்கு புலிகளின் நிர்வாகம் செம்மையாக இருந்தது.

புலிகள் தாங்களாகவே வகுத்து வைத்துக்கொண்ட சட்டங்களாக இருந்தபோதும் அவற்றை ஏற்று மதித்து அனுசரித்து நடக்க மக்கள் தயாராக இருந்தனர். சமூக ஒழுங்கு மிகத் திறம்படப் பேணப்பட இது உதவிற்று.

பின்னர் வந்த இராணுவ நிர்வாகக் காலப்பகுதியும் போர்ச் சூழ்நிலையும் தலைமுறை தலைமுறையாக தமிழ் மக்கள் கட்டிக்காத்துப் பேணிவளர்த்து வந்த பண் பாட்டையும் கலாசாரத்தையும் விழுமியங்களையும் படு குழிக்குள் தள்ளின.

குடாநாட்டுத் தமிழர்கள் தங்கள் தனித்துவத்தைக் காட்டில் பறக்கவிடத் தொடங்கினர்.

தமிழர் தாயகத்தின பண்பாட்டு மையமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணத்துக்குள் நஞ்சுவிதைகள் விதைக்கப்பட்டன.

களவு, வழிப்பறி, கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, விபச்சாரம், கசிப்பு, போதைப் பொருள், ஆபாசத் திரைப்படம் என்று தமிழர் சமூகத்தை திட்டமிட்டு சீரழிக்க பல வழிமுறைகள் கையாளப்பட்டன. அதன் விளைவுகள் இன்றும் சமூகத்தைப் பற்றித் தொடர்கின்றன.

தமிழ்த் தேசிய இன எழுச்சிக்கு எதிராக - விடுதலை உணர்வுக்கு எதிராக - எதிரி பயன்படுத்திய புதிய ஆயு தம அதன் வேலையை இன்றும் நின்று நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

குடாநாட்டின் இளைய தலைமுறை இலக்குத் தெரி யாத திசைகளில் அலைக்கழிக்கப்பட்டு பலவீனப்பட்டு வருகின்றது.

பலவீனமான பொலீஸ் நிர்வாகம் குற்றச் செயல் களைத் தடுக்கப் போதுமானதாக இல்லை. "தட்டிக் கேட்க ஆளில்லாத" நிலையில் அனைவருமே சண்டப் பிரசண்டர்களாக வீதியில் இறங்கி மோத, பெருமளவு இரத்தம் அநியாயமாகச் சிந்தப்படுகின்றது.

முன்பு ஒரு காலத்தில் போர் நடவடிக்கைகளால் காயமடைந்த மக்களுக்கு ரணசிகிச்சை அளித்து ஏராளமான உயிர்களைப் பாதுகாத்த யாழ்.போதனா மருத்துவமனையின் வார்ட்டுக்களை இப்போதும் காய மடைந்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் நிறைத்துக் கொண்டே இருக்கிறார்கள; அண்ணன், தம்பி, சகோ தரர்கள், உறவினர்கள் தமக்குள் மோதி இரத்தம் சிந்துகிறார்கள்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு திருப் பகரமான கட்டத்தில் - தீர்க்கமான தீர்வு ஒன்றை எட்டும் தருணத்தில் - நின்றுகொண்டிருக்க -

தமிழ்ச் சமூகம் இப்படியாக சீரழிந்து, தறிகெட்டு வாழத் தலைப்பட்டிருப்பது ஒரு மோசமான பின்னடை வேயன்றி வேறல்ல.

தமிழ்த் தேசிய இனம் முன்னொருபோதும் இல்லாத வாறு ஒன்றுபட்டு பற்றுறுதியோடு - வீறுகொண்டு நிற்க வேண்டிய காலகட்டம் இது.

இதுவே முதலும் இறுதியுமான சந்தர்ப்பமாக தமிழினத்தின் முன்னுள்ளது. இந்தக் கட்டத்தில் சமூகத்தைச் சீரழிக்கும் நடவடிக்கைகள் இரும்புக் கரம்கொண்டு அடக்கப்படவேண்டும். சீரழிவு சக்தி களை இனங்கண்டு அம்பலப்படுத்த ஒவ்வொரு தமிழ்மகனும் துணிச்சலுடன் செயலில் இறங்க வேண் டும்.

சமூகத்தைத் திருத்தும் கடமையை தேசக் கட்டு மானப் பணிகளில் ஒன்றாக்கி தமிழர் தனித்துவத் தைக் கட்டிக்காப்போம; அந்தப் பணியில் அனைவரும் அணிதிரள்வோம்.

---

### பொலன்னறுவை மாவட்ட கிராமத்தில்

# 21 முஸ்லிம் குடும்பங்களை மீளக் குடியமர்த்த ஏற்பாடு

காத்தான்குடி,மே17

பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள மகாவலி தென்ன குடியேற்றக் கிராமத்திலிருந்து வெளியேறிய 21 குடும்பங் களையும் மீளக்குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

1996ஆம் ஆண்டில் நடைபெற்ற வன்செயல்கள் காரண மாக வெளியேறிய இம்மக்கள் காத்தான்குடி பிரதேசச் செய லகப் பிரிவில் உறவினர், நண்பாகளின் வீடுகளில் வசித்து வரு கின்றனர்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் எம்.சி.எம்.சரீப் இக்குடும் பங்களின் சுயவிருப்ப மீள்குடியேற்ற விண்ணப்பங்களைப் பெற்று, மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத் திருக்கிறார்.

1993ஆம் ஆண்டில் காணிகளற்ற 83 முஸ்லிம் விவசாயக் குடும்பங்களுக்கு அக்குடியேற்றக் கிராமத்தில் காணிகள் வழங்கப்பட்டன. எனினும் 26 குடும்பங்கள் மட்டுமே குடியேறின.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் முதலில் குடியேற்றப்பட்ட பின்னர் எஞ்சிய காணியற்ற குடும்பங்களையும் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிகிறது. (க)

---

## நாட்டு நடப்பு

### "வௌவால் தொங்கிடும் வண்ணக் கோவில்"

ஊரெலாம் கோயில் கட்டி
உருக்கமாய் குடமுழுக்கும் ஆட்டி
திருப்பெரும் தேரும் செய்து
திருமணி மகுடம் சூட்டி
விருப்புடன் பத்திரிகை தன்னில்
விளம்பரம் முழுதாய்ப் போட்டு
உருக்கமாய் செய்த பக்தர்
ஊரைவிட்டு அகன்று செல்ல
ஒருநேர பூசை இன்றி
ஒருதிரி விளக்கு மின்ன
பெருத்த பேர் வௌவால் கூடி
பெருக்குது [illegible] இனத்தை அங்கே!

- விகடகவி

---

### உலக உணவுத் திட்டத்தின் மூலம்

# அகதி முகாம்களில் வாடும் மக்களுக்கு மூன்று கோடி ரூபா பெறுமதியான அரிசி!

## முதலாவது தொகுதி அமைச்சரிடம் கையளிப்பு

கொழும்பு,மே17

யுத்தத்தால் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழும் குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் மூலம் 3கோடி ரூபா பெறுமதியான இரண்டாயிரம் மெற்றிக்தொன் அரிசி வழங் கப்பட்டது.

இது தொடர்பான நிகழ்ச்சி நேற்று முன்தினம் புனர்வாழ்வு, அகதிகள், மீள்குடியேற்ற அமைச்சில் நடைபெற்றது.

இத்திட்டத்தின் முதலாவது தொகுதி உணவை இலங்கையி லுள்ள அமெரிக்கத் தூதுவர் அஸலி வில்ஸ், புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த் தனாவிடம் கையளித்தார்.

கடந்த 2001 நவம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற உலக உணவுத்திட்டம் புதிய செயற்றிட்டத்தின் கீழ் மீண்டும் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் முதற் கட்டமாகவே இந்த அரிசி வழங்கப்பட்டது.

புத்தளம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொசசி, யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு இந்த அரிசி வழங் கப்படவிருக்கிறது.

இது தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் தகவல் தருகையில் -

இத்திட்டத்திற்கு தற்போது 36 சதவீத உதவி கிடைத்துள் ளது. இலங்கையின் தற்போதைய சமாதான முன்னெடுப்புக் களை சர்வதேச நாடுகள் அவதானித்து வருகின்றன. முன் னெடுப்புகளின் அடிப்படையில் இந்த உதவி அதிகரிக்கும் என்று கூறினார்.

இவ்வைபவத்தில் உலக உணவுத் திட்ட பிராந்திய பணிப் பாளர் ஜெ.ஃப் ரெ.ஃப்டிக் உட்பட அமைச்சின் உயர் அதிகாரி களும் கலந்துகொண்டனர். (க)

---

### ஜனாதிபதி மீதான கொலை முயற்சி

# நான்கு பேருக்கு எதிராக நூற்றிப்பத்து குற்றச்சாட்டுகள்

ஜனாதிபதி சந்திரிகாவை கொலைசெய்ய முயற்சித்தனர் எனக் கூறப்படும் நான்கு பேருக்கு எதிராக சட்ட மா அதிபர் 110 குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வேலாயுதன் வரதராஜா, சக்திவேல் இலங்கேஸ்வரன், ரகுபதி சர்மா, வசந்தி ரகுபதி ஆகிய நால் வருமே குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்களாவர்.

இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள 110 குற்றச்சாட்டுக்களுக் கும் சாட்சியங்களாக 195பேரும் தடயங்களாக 72பொருள் களும் சட்டமா அதிபரால் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-4)

---

## ஜேர்மனியில் 'கலையரசி' நிகழ்வு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஜேர்மன் பழைய மாணவர் சங்கம் நடத்தும் 'கலையரசி-2002' விழா நாளை சனிக்கிழமை மாலை 4மணிக்கு ஜேர்மன்,பொச்சும் நகரில் பெஸ்டலோஸி றியசுல் மண்டபத்தில் சங்கத் தலைவர் ஆர்.ஸி.இராமநாதன் தலைமையில் நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன் தலை மையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் ,கொழும்பு, லண்டன்,கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் இயங்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றுவர்.

இசை, நடன நிகழ்ச்சிகள் உட்பட பல்வேறு கலை நிகழ்ச் சிகள் இவ்விழாவில் இடம்பெறவுள்ளன.

---

### வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட

# சிறுவர்களின் மறுவாழ்வுப் பணிகளுக்கென 20 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்

## *குதிரைச் சவாரியாக வந்த பெண்கள் தெரிவிப்பு*

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மறுவாழ்வுக் காக வடக்கில் 20 திட்டங்களை இனங்கண்டுள்ளோம். அதன் மூலம் நாளாயிரத்து 500 சிறுவர்கள் பயனடைவர்.

குதிரையில் சமாதானப் பேரணி மேற்கொண்டு நேற்று யாழ்நகர் வந்துசேர்ந்த லண்டனைச் சேர்ந்த கிறிஸ்சோ அண்டசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பஸ் நிலையத்தை முற்பகல் 10 மணியளவில் இவர்கள் வந்தடைந்தனர். உதயன் அலுவலகத்துக்கு அவர் கள் வருகைதந்தனர்.

கிறிஸ்கோ அண்டசனுடன் திருமதி நிஹாறா ஜயத்திலக ரட்ணமும் குதிரைச் சவாரி மூலம் வந்திருந்தார்.

கடந்த 5ஆம் திகதி கொழும்பில் இருந்து இரு குதி ரைகளுடன் புறபபட்ட இவர் களுடன் 7பேர் மூன்று வாக னங்களில் வந்தனர். இவர்கள் சிறுவர்களுக்கு வழங்கவென பெரும் தொகையான உடுபுடை வைகள், உணவுப் பொருள்கள ஆகியவற்றையும் எடுத்துவந்த னர்.

கொழும்பு நகரப்பகுதியில் வலம்வந்த இவர்கள் பின்னர் கண்டி வீதி வழியாக யாழ்நகர் வந்து சேர்ந்தனர்.

குதிரைச் சவாரியாக வந்தமைக்கான காரணத்தைக் கேட்டபோது வடக்குச் சிறுவர்கள் குதிரையைக் கண்டிருக்க மாட்டார்கள். இதுதான் குதிரை என்பதை அவர்களுக்குக் காட்டவே குதிரையில் வந்தோம். குதிரைகளைப் பார்த்து சிறுவர்கள் பிரமித்துப் போனார்கள் என்று பதில் அளித்தனர்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவி வழங்கும நோக்குடன் இருவரும் இணைந்து ஓர் அமைப்பாகச் செயற்படுவதாகத் தெரிவித்த இவர்கள், கண்டி வீதி திறக்கப பட்ட பின்னர் இரண்டு மூன்று தடவைகள் வன்னிக்கும் யாழ்ப் பாணத்துக்கும் வந்து இங்குள்ள நிலைமையை ஆராய்ந்ததாகக் கூறினர்.

சமாதானத்தை எய்தல், சிறுவர்களுக்கு உதவுதல் ஆகிய இரு நோக்கங்களைக் கொண்டு செயற்படுவதாகத் தெரிவித்த அண்டசன், தமது சொந்த நாடான லண்டனிலும் கொழும்பிலும் உள்ள வர்த்தகப் பெருமக்களுடன் கலந்துரையாடி உதவிப் பொருள்களைச் சேகரித்து சிறுவர்களுக்கு வழங்குவதாகக் கூறினார்.

"வவுனியா, மாங்குளம், கிளிநொச்சி, ஊர்காவற்றுறை, நெடுந் தீவு ஆகிய இடங்களில் 20 திட்டங்களை செயற்படுத்தவிருக் கிறோம். சுமார் 4ஆயிரத்து500 சிறுவர்களுக்கு உதவவிருக் கிறோம். சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பாடசாலை உபகர ணங்கள், சீருடைகள் ஆகியவற்றை வழங்கவிருக்கிறோம்" என்றார் நிஹாரா ரட்ணம்.

"சிறுவர்களிடையே சித்திரப் போட்டி ஒன்றை நடத்தவிருக கிறோம். அந்தச் சித்திரங்களை கொழும்புக்கு எடுத்துச்சென்று அங்கு கண்காட்சி நடத்தத் திட்டமிட்டுள்ளோம். அத்துடன் இங் கிருந்து 25 சிறுவர்களைக் கொழும்புக்கு அழைத்துச் சென்று அங்குள்ள நிலைமையை காட்டவிருக்கிறோம்" என்றார் அவர்.

---

### நாளை

வைகாசி 04
சனிக்கிழமை
(18.05.2002)
திதி : ஷஷ்டி
பிற்பகல் 1.50 வரை.
நட்சத்திரம்: பூசம்
பிற்பகல் 3.56 வரை.
ஷஷ்டி விரதம்
சுபநேரம் : 2.53 - 4.23
ராகுகாலம்: 8.13 - 10.23
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உண்மையான மகிழ்ச்சி யின் அடிப்படை மனச் சான்றில் உள்ளது.

# செலின்கோ தொகுதி கம்பனி

# பாதம் பதிக்கும் ப

## த பைனான்ஸ் கம்பனி

### நிதிச்சேவைகள்



**Message from the Senior Administration Manager Mr.Anton Gerard.**

Since joining the finance Co., Ltd., in Jaffna in 1976, I have been through thick and thin of Ceylinco Consolidated braving many a storm that lashed my motherland.

The holocaust that rocked the entire nation forced us to move us to Colombo in 1985, where at Union Place we ran an office catering to the needs of our Jaffna customers.

It was a time when our actual lending towards the customers was more thanRs.35 million whereas the liability towards the customers ran as high as Rs.40 millions. I undertook to meet this liability and I am proud to say that every cent of this was repaid to the customers.

Our Chairman Deshamanaya Lalith Kotalawela, a man of great vision whose current thoughts are with solo - U&Sarana has justified his thoughts on the Jaffna man by opening up Eleven Subsidiaries of his Ceylinco Consolidated in Jaffna.

Branch Office in Jaffna
The Finance Company Limited
No.173, Stanley Road, Jaffna.

Deshamanya Lalith Kotalawala, a personification of kinddness, a manof Stupendous Charactor join hands with the Jaffna community to eradicate poverty through Grameen Credit for the poor, restore and reconstitute damaged buildings and build new houses and commercial buildings.

Let this opening of our branches in Jaffna usher zone of peace and understanding for thebetterment of mankind.

The Finance co Ltd
TFC
YOUR SUCESS IS OUR GOAL

**Dear Friends,**

Today, on behalf of all of us at Ceylinco Consolidated Group of Companies, I lit a lamp inaugurating the opening of 11 Ceylinco Companies. Seylan Bank will offer its services as a Bank, Ceylinco Insurance Company Ltd., Life and General will offer insurance, The Finance Company will offer financial services. This company has come home after over a decade back to Jaffna. Some new services never before offered to you will come through The Finance & Guarantee Group, our Chennai based Joint Venture with Shriram, Ceylinco Shriram Services, Ceylinco Leasing, Ceylinco Home Nursing our Joint Venture with Singapore, Ceylinco CISCO, Ceylinco Travels, Ceylinco Building Society and most important Ceylinco Grameen Credit Company. Through Ceylinco Grameen we have inaugurated a fund for the poor with a Rs.5 Million Inaugural donation from Seylan Bank.

The lamp we lit is one of hope and a prayer for peace. We hope that it will spread love and understanding and peace not only in Jaffna, the North and East, but throughout the whole country. We hold sacred the belief that we are all children of the universe, that all of us and every human being on earth, has the right to live in equality, without discrimination, free from want and poverty and in peace; to pursue each one's dream in life.

This can come only through love for one another, understanding, forgiveness and tolerance.

We will make every effort to join hands with the Jaffna Community to eradicate poverty through Grameen Credit for the poor, restore and aged buildings and build new houses and ings, we will offer and give access to cre society.

We are confident that by our effo prosperity,employment opportunities the economy in the North and East.

We come to you in love and peace t you to make our mutual dreams and aspi May God Bless You all






*Lalith Kotelawala*
*Chairman - Ceylinco Consol*

## த பைனான்ஸ் அன் கரண்டி நிறுவனம்

இல.173, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

முன்னொருபோதும் வழங்காத பல சிறப்பு சேவைகளை வழங்கவுள்ளது.



கைவண்டி வழங்கி சுயதொழில் ஊக்குவிப்பு

## செலின்கோ இன்ச

### ஆயுெ

560/562, ஆஸ்

குறைந்த வருமானம் பெறுபவர்கள்கூட பு






## செலின்கோ சிஸ்கோ

560/562, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## செலின்கோ ட்ரவல்ஸ் அன் டுவர்ஸ்

CCT

560/562, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

- ஐரோப்பிய, மத்தியகிழக்கு நாடுகளுக்கு விமான பிரயாண டிக்கட் வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- ஹோட்டல், தங்குமிட வசதிகள் செய்துகொடுத்தல்.
- வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கான காப்புறுதி வழங்கல்.
